# ஸ்வாமி ஐயப்பன் வழிபாட்டுத் தத்துவம்

(தொகுப்பு : K. லக்ஷ்மணன்)

**என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து**
**அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே.**

– தாயுமானவர்

**வழிபாடு :** ஐயப்பன் வழிபாட்டில் மூன்று விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். 1. கடவுள் பக்தி, 2. சமய பக்தி, 3. குரு பக்தி, பகவானிடம் ஒருவன் பிரேமை முழுவதையும் செலுத்துவதைத் தான் பக்தி யோகம் என்பார்கள்.

கர்ம, பக்தி, ஞான, ராஜ யோகங்களில் பக்தி யோகமே மிகச் சுலபமானது. தாய், தந்தை, சகோதரர், தாரம் இவரிடமெல்லாம் அன்பு செலுத்துவது யாருக்கும் இயல்பு. அன்பு செய்ய யாரும் கற்கத் தேவையில்லை, எனவே தான் பக்தியோகம் எளிதாகிறது.

**கடவுளிடம் பக்தி :** கடவுள் ஒருவரே எல்லா வற்றையும் கடந்து தனித்து நிற்பவர்; எல்லாவற்றிலும் கலந்து மறைந்து இயங்கும் அற்புத சக்தி பெற்றவர். அவரை ஜோதி வடிவமாகவே தியானித்து வழிபடுதல் மிகவும் மேலான முறை. நமக்கு சோதனைகள் அதிகமாக ஆக, கடவுள் நம்மை நெருங்குகிறார் என்றே பொருள். ஆகவே மனம் தளராமல் சோதனைகளை சமாளிக்க வேண்டும்.

**சமய பக்தி:** ஒருவனை தன் வாழ்க்கையில் தீய பாதையில் செல்லாதவாறு தடுத்து, தூய பாதையில் செல்ல உதவும் ஞான மார்க்கம் சமயம். சமயமும் அதன் கொள்கைகளும் நமது இரு கண்கள். சமரச சன்மார்க் கத்தை போதிக்கும் சமயமே சிறந்த சமயமாகும். அவ்வகையில் ஐயப்ப வழிபாடு மிகச் சிறந்ததொன்று.

**குரு பக்தி:**

**வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடும்**
**உன் மகிமையது சொல்ல எளிதோ**
**மந்த்ர குருவே தந்த்ர குருவே**
**மூலன் மரபில் வரு மௌன குருவே**

– தாயுமானவர்

குருவின் உதவியாலேயே எதையும் எதையும் செய்ய வேண்டும். வேறு வழிபாடுகளில் உள்ளதைவிட ஐயப்பன் வழிபாட்டில் இது மிகவும் முக்கியம். ஐயப்ப பக்தர்கள் குரு தத்துவம் பற்றி முக்கியமாக தெரிந்துக் கொள்ள வேண்டும்.

சகலத்திலும் பூரணத்துவமடைந்தவரும், தூய்மை யானவருமே குரு ஆவார். கப்பலை ஓட்டிச் செல்லும் மாலுமீ போன்றவர் அவர். குரு வழி செல்லாத சிஷ்யனும், குரு இல்லாத வித்தையும், தலைவன் இல்லாத சேனையும், கட்டுபாடு இல்லாத வாழ்க்கையும், விரதமும் பஜனையுமில்லாத பக்தியும், அறவழி செல்லாத அரசனும் பயனற்றவை. குருவுக்கு மேலான தத்துவம் இல்லை.

பேருண்மை என்ற விளக்கு கோடி சூரிய பிரகாசமாகப் பிரகாசிக்கிறது. ஆனால் உங்கள் கண்ணுக்கு அது புலப்படுவதில்லை. அதை உங்களுக்கு காட்டவே குருநாதர் தீவட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கிறார். அவர் விளக்கினால், விளக்குகள் இருக்கும் இறைவன் உங்களுக்கு காட்சியளிப்பான் என்கிறார். தீவட்டி கொண்டு வெளிச்சம் காட்டும் குருநாதரை விளக்குடையார் என்றும் விளக்குக்குள்ளே ஒளிந்து நிற்கும் இறைவனை விளக்கவர் என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

ஐயப்பன் வழிபாட்டில் சரணாகதிக்குப் பின் மிக முக்கியமாக விளங்குவது ஆசாரிய ஸ்தானம்.

(ஐயப்ப பூஜை செய்து வைக்கும் தகுதியுள்ள வர்களும், சபரிமலை பலமுறை சென்று ஐயப்பனை வழிபட்டவர்களும், கன்னி ஐயப்பன் மார்களுக்கு குருவாக இருக்கத் தகுந்தவர்கள்)

**சரணம் ஐயப்பா**

**சாமியே சரணம் ஐயப்பா!**
**சபரிகிரி வாசனே சரணம் ஐயப்பா!**
**தர்ம சாஸ்தாவே சரணம் ஐயப்பா!**
**பூரண புஷ்கலா நாயகனே சரணம் ஐயப்பா!**
**மணிகண்ட பிரபுவே சரணம் ஐயப்பா!**

கார்த்திகை மாதம் பிறந்துவிட்டாலே இம்மாதிரி கோஷம் காதில் விழுந்து நம்மையெல்லாம் ஐயப்பனைப் பற்றி சிந்திக்க வைக்கிறது. இந்த ஐயப்பன் வழிபாட்டில் ஒரு விசேஷம், பல பேர்களாகக் கூடி ஆராதிப்பது கூட்டி வழிபாடு. தனியாக ஐயப்பன் மலைக்குப் போய் வந்தவர்கள் என்று யாரும் இருக்க முடியாது. அப்படிச் செய்யவும் முடியாது. அன்பு, ஒற்றுமை, சமத்துவம், மனோதிடம், பக்தி ஆகிய நற்குணங்களை மனிதனுக்குப் போதிப்பதுதான் ஐயப்பன் விரதம்.

விடியற்காலையில் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம், வெறும் வயிற்றோடு ஐயப்ப நாமஸ்மரணை, கருப்பு சட்டை, வேஷ்டி, காலில் செருப்பு போடாமலிருப்பது. மிகக் கண்டிப்பான ப்ரும்மசரிய அனுஷ்டானம், இரவில் தரையில் படுப்பது, லாகிரி வஸ்துக்கள், புலால் உணவு கூடாது. இதெல்லாம் 45 நாளைக்கு

இருந்தாக வேண்டும். ஐயப்பன் ஆலயம் சென்று வர இவ்வளவு கட்டுப்பாடுகள் ஏன் ?

மனிதனின் மமதையை அடக்க இது ஒரு வழி. மன உறுதி, தெய்வ நம்பிக்கை, சகிப்புத் தன்மை எல்லாம் இந்த விரதத்தினால் நிச்சயம் ஏற்படுகிறது என்பது மேற்கொண்டவர்கள் அனுபவத்தில் கண்ட உண்மை.

புதிதாக சபரிமலை போகிறவர்களும், வழக்க மாய்ப் போய் வருபவர்களும் இந்த நியதியை கடை பிடிக்கவே வேண்டும். மனிதனை மனிதனாகவே ஆக்கிக் கொள்ள ஆரம்பிக்கப்படும் முதல் கட்டமே இந்த விரதம். தாடி வளர்த்தல், கருப்புச் சட்டை அணிதல், குரு வழி சென்று தரிசனம் முடித்து வருதல் இவைதான் யாத்திரையின் உட்கருத்து என்று நினைக்கக்கூடாது. இப்படி நினைத்தால் அது கேளிக்கை உல்லாசப் பயணமே யாகும். ஜீவனை விழிப்படையச் செய்யும் பண்புடைய பக்குவ நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ளும் புனித யாத்திரை இது.

**ஐயப்பன்மார்கள் அனுஷ்டிக்க வேண்டிய விதிகள்**

கார்த்திகை மாதம் முதல் தேதியிலிருந்து 19 தேதிக்குள் ஒரு நல்ல முகூர்த்த நாளில் ஆலய வழிபாட்டுக்குப்பின் மூன்று நான்கு முறை சபரிமலை யாத்திரை சென்ற ஒருவரை குருநாதராக ஏற்று அவர் ஆசிகளுடன் அவர் கையால் கழுத்தில் துளசி மணி அல்லது ருத்திராட்ச மாலையை அணிவிக்கச் செய்து ஐயப்பன் விரதத்தை துவக்க வேண்டும்.

மாலை போட்டுக் கொண்ட தினத்திலிருந்து காலை மாலை இரு வேலைகளிலும் ஸ்நானம் செய்து ஐயனை வழிபட்டு ''சாமியே சரணம்'' என்று சொல்ல வேண்டும். அன்றிலிருந்து முகக்ஷவரம், முடி வெட்டிக் கொள்வது எல்லாம் நிறுத்தப்பட வேண்டும். சபரிமலை யிலிருந்து திரும்பி வந்து சக்திக்கேற்றவாறு ஆராதனை செய்த பிறகே முடியை அகற்ற வேண்டும். மது, மாமிசம், லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதை உடனே நிறுத்த வேண்டும்.

நூற்றுக்கு நூறு விகிதம் ப்ரும்மசரியத்தை மேற்கொள்ள வேண்டும். எந்த விதத்திலும் இதற்கும் பங்கம் வரக்கூடாது. வீட்டுக்கு விலக்கான ஸ்திரீகளைப் பார்ப்பதோ பேசுவதோ கூடாது. செருப்பு உபயோகிப்பது, கட்டில் மெத்தையில் படுப்பது விலக்கப்பட வேண்டும். கருப்பு அல்லது நீல நிறத் துணியை உடுத்த வேண்டும். அலுவல் காரணமாக இரு சாத்தியப் படாவிட்டால் விரதம் இருப்பதற்கு அடையாளமாக ஒரு சின்னத்தையாவது அணிய வேண்டும்.

ஜோதி தரிசனம் செய்யப்போகுமுன் மனம் உடல் எல்லாவற்றையும் விரதம் இருப்பது மூலம் சுத்தம் செய்துக் கொள்கிறோம். நம் உடலிலுள்ள அக அழுக்கு களான அகங்காரம், கோபம், தாபம் முதலியவை வெளிப் படும் காலம் என்பதையே கருப்புத்துணி காட்டுகிறது.

கருப்பு என்பது விஷ்ணுவின் வர்ணம், வெண்மை என்பது சிவபெருமானின் வர்ணம். எப்பொருளையும் எரித்தால் அது கருப்பாகி விடுகிறது. அப்படி கருப்பாகி உள்ளதையும் எரித்தால் அது வெண்மை நிறமடைகிறது. விஷ்ணுவின் நிறமான கருப்பை அணிந்து சிவனின் நிறமான வெண்மை ஜோதியை தரிசிக்கப் போவதையே இது குறிக்கிறது.

**இருமுடி பற்றி விளக்கம்**

ஐயப்ப யாத்திரையில் இருமுடி முக்கியமான அம்சம்; தலையணி உரைபோன்ற பெரிய பையில் அரிசி, பருப்பு, வெல்லம் இவைகளைத் தனித்தனியாகக் கட்டி, பசும் நெய் அடைத்த தேங்காய் ஒன்றையும் வைப்பார்கள். இதுதான் முன்முடி. தலையில் இதை ஞாபகமாக முன் பக்கம் வைத்து சுமந்து செல்ல வேண்டும். இது பகவானுக்கு காணிக்கை, பதினெட்டாம் படியில் இம்முடி இல்லாமல் ஏறமுடியாது. ஏறவும் கூடாது. பின் முடியில் நமக்கு வேண்டிய அரிசி, தேங்காய் முதலியவைகளை வைத்துக் கட்ட வேண்டும். முன் பக்கம் பின் பக்கம் மாறாமல் இருக்க பின் முடியில் ஒரு குறி செய்யப்படுவது நல்லது.

இருமுடியை அவரவர்களே சுமந்து செல்ல வேண்டும். பிறர் சுமந்து வரக்கூடாது. இந்த இருமுடியை எக்காரணம் கொண்டும் வழியில் தானே இறக்கக் கூடாது. முக்கியமாக தரையில் வைக்கக் கூடாது. இறக்குவதென்றால் இரண்டு வருடம் அல்லது மூன்று வருடம் மலைக்குச் சென்று வந்த ''ஸீனியர்'' ஐயப்பமார் களைக் கூப்பிட்டு இறக்கச் சொல்ல வேண்டும். ஏனென்றால் முன் முடியிலுள்ள நெய் தேங்காயில் ஐயப்பனே இருப்பதாகப் பொருள். மலஜலம் கழித்த பின் கை கால்களை சுத்தி செய்து கொண்டு பின் தலையில் பிறரை வைக்கச் சொல்ல வேண்டும்.

பசு நெய் அடைத்த தேங்காய் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். தேங்காய்க்குள்ள மூன்று கண்களைத் திறந்து, அதில் பசும் நெய்யை உருக்கி உள்ளே விட்டு, பின்னார் கார்க்கினால் மூடி சீல் வைக்க வேண்டும். பசு நெய் லக்ஷ்மி அம்சமுள்ளது. அந்த லக்ஷ்மி எப்போதும் விஷ்ணுவின் மார்பில் வசிப்பவள். ஆகவே நெய் விஷ்ணு ஸ்வரூபம். தேங்காய்க்கு சிவ பிரானைப்போல மூன்று கண்கள் உண்டு. அது

சிவ ஸ்வரூபம். ஹரிஹர புத்திரனைக் கண்டு காணிக்கை செலுத்த நெய் அடைத்த தேங்காயைவிட பொருத்தமான பொருள் வேறு என்ன இருக்க முடியும்?

ஐயப்பன் இருமுடியில் இடம் பெறும் தேங்காயை உபயோகிப்பதில் பெரும் தத்துவமே அடங்கி யிருக்கிறது. புலிப்பால் கொண்டுவரக் காட்டுக்கு கிளம்பிய மணிகண்டனை, அவனை வளர்த்த பந்தள மகாராஜா "ஒரு படையை உதவிக்குக் கூட்டிச் செல்" என்கிறார். "படையைக் கண்டு புலி ஓடிவிடும். தனியாகச் சென்றால்தான் புலியை அணுக முடியும்" என்கிறார் மணிகண்டன். அப்படியானால் சிவஸ்வரூபமாக உள்ள (முக்கண் கொண்ட) தேங்காயையாவது உடன் எடுத்துச் செல் என்று வளர்த்த தந்தை எடுத்துக் கொடுத்த தேங்காயை ஐயப்பன் தனக்காக முக்கிய நிவேதனப் பொருளாகக் கொண்டிருக்கிறார்.

**தேங்காயை உடைக்கும் தத்துவம்**

தேங்காய்க்குள் உள்ள பசு நெய் ஐயப்பனுக்கு அபிஷேகப் பொருளாக விளங்குகிறது. தேங்காயை முதலில் தரையில் நன்றாகத் தேய்த்து விட்டு, நாரை எல்லாம் பிய்ந்து எரிந்துவிட்டு, மழமழவென்று வைக்க வேண்டும். ஒரு கண்ணில் துவாரம் போட்டு அதன் மூலம் இளநீரை அகற்றி காயவைக்க வேண்டும். இருமுடி கட்டும் தினத்தன்று குருசுவாமி இந்த தேங்காயை வைத்துப் பூஜை செய்வார். பின்பு அவர் ஒவ்வொரு ஐயப்பனையும் கூப்பிடுவார். "ஐயப்பன்மார்" அத்தேங்காயைப் பிடித்துக் கொண்டிருக்க அத்துவாரத்தின் வழியே சுத்தமாகக் காய்ச்சிய பசும் நெய்யை "சுவாமியே சரணம் ஐயப்பா" என்று கூறிக்கொண்டே விடுவார். மலைக்குச் செல்லுபவர் தாய், தந்தை மற்றும் உறவினர் களும் இதில் ஆளுக்கு கொஞ்சம் நெய் விடலாம். அத் தேங்காய் நிரம்பியதும் கார்க்போட்டு அடைத்து எல்லா நெய்த் தேங்காய்களையும் வைத்து பூஜை நடைபெறும்.

தேங்காய் மேல் ஓடுதான் நம் உடம்பு. அதில் விடப்படும் நெய் நம் உடலிலுள்ள உயிர். இந்த உயிரான நெய்யை பத்திரமாக எடுத்துச் சென்று, ஐயனின் காலடியில் சமர்ப்பித்து, முழு சரணமடைந்து விட்டோம் என்பது இதிலுள்ள தத்துவம். நெய் அபிஷேகம் முடிந்தபின் அந்த தேங்காயை கணபதி சன்னதி எதிரில் கொழுந்துவிட்டு எரியும் ஹோம குண்டத்தில் எறிவார்கள். அதாவது நம்முடைய உயிரை அந்த இறைவனுக்கும், உடலை நெருப்புக்கும் அர்ப்பணிக்கும் தத்துவம் தான் இதில் அடங்கியுள்ளது. இந்த நெய் ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்த பின் பிரசாதமாக கொடுக்கப்படும். இதற்கு ஈடு இணையுள்ள மருந்து எதுவுமே இல்லை. எப்படிப்பட்ட வியாதியோ அல்லது கெடுதலோ இருந்தாலும் ஐயப்பன் பெயரைச் சொல்லி இதை உட்கொண்டால் அவை எல்லாம் குணமாகி சீர்பட்டுவிடும்.

இருமுடி பூஜை நடத்தி பிரயாணத்தை தொடங்கி விட்டால் எந்த விதமான விதிவிலக்குகளையும் கடைப் பிடிக்காமல் விரதங்களின் விதிப்படி அவசியம் நடந்துக் கொள்ள வேண்டும். யாத்திரை தொடங்குமுன் சக்திக் கேற்றவாறு ஐயப்பனுக்குப் பூஜை செய்து அன்னதானம் செய்ய வேண்டும். இதைச் செய்ய முடியாதவர்கள் விசேஷமாக ஐயப்பன் ஆராதனை செய்யும் இடங் களுக்குச் சென்று சரீர உதவி செய்யலாம். ஐயப்பன் மார்களை சந்திக்கும்போதெல்லாம் ஐயனை நினைவு படுத்திக்கொண்டு "சாமி சரணம்" என்று சொல்லி வணங்க வேண்டும். மாலையணிந்த பிறகு குடும்பத்தில் நெருங்கியவர் யாரேனும் காலமாகி அதன் காரணமாக துக்கத் தீட்டு ஏற்படுமானால் அந்த வருடம் யாத்திரை போவது கூடாது. விரதகாலத்தில் துக்க சம்பவங்களை விசாரிக்க துக்கம் ஏற்பட்டவர்களின் வீட்டுக்கு 15 நாட்களுக்குப் பிறகே போகலாம். இடையில் துக்கம் ஏற்பட்டவர்களைப் பார்ப்பதும் பேசுவதும் கூடாது. ஐயப்பன் நினைவே விரத காலத்தில் மேலோங்கி இருக்க வேண்டும்.

**ஐயப்ப உருவ தத்துவம்**

ஐயப்பன் என்ற தர்ம சாஸ்தாவின் மூர்த்தத்தில் சைவம், வைஷ்ணவத்துடன், சக்தியின் சைதன்யமும் கலந்துள்ளது. இந்த சாஸ்தா வேத காலத்திற்கு முன்பே வழிபடப்பட்ட தெய்வம். பின்னர் வேத மதமும், திராவிட மதமும் இணைந்த காலத்தில் இவர் ஹரிஹர புத்திர ராகவே கருதப்பட்டார்.

ஐயப்பன் அமர்ந்துள்ள திருக் கோலமே ஒரு யோகாசன முறை யாகும். இரண்டு குதிகால்களின் மீது உடலின் அடிப்பாகத்தை அழுத்தி, உட்பாரம் வயிற்றுடன் குதிகால்களில் தூக்க முன்புறம் சாய்ந்த நிலை, இந்நிலையில் உடல் வில்போல் ஆடும் தன்மையுடையது. குதிக்கால்களின் அழுத்தம் தொடைமூலம் வயிறு பாகத்தை உந்த, உந்திக்கமலம் அழுத்தப்பட்டு உட்சுவாசு, புறசுவாசு, நிச்சுவாச (கும்பகம், பூரகம், ரேசகம்) பிராணயாம முயற்சியினால் மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தி சுலபத்தில் மேல் நோக்கி எழுப்ப உதவுகிறது.

இந்த சக்தி ஆறு ஆதாரங்களில் பாய்ந்து பிரம்மந்திரம் எனப்படும் சகஸ்ரதள கமலத்தை எட்டி, ஜோதி மயத்தில் கலந்து நிற்கும் முமுக்ஷு நிலையைக் காட்டுகிறது. இதுவே பிரணவ ஸ்வரூபம் (சோளிங்க புரத்து யோக நரசிம்மரும், யோக ஆஞ்சநேயரும், ஐயப்பன் போலவே யோகாசன முறையில் அமர்ந்து காணப் படுகின்றனர்) அம்பிகையின் பத்து வித்யை களில் ஒருவளான திரிபுர பைரவி இம்மாதிரி யோக நிலையில் தான் அமர்ந்திருக்கிறாள். ஆந்திராவிலுள்ள ஹேமாவதி என்ற இடத்திலும் இம்மாதிரி அமர்ந்துள்ள யோக தக்ஷிணா மூர்த்தியை தரிசிக்கலாம்.

ஐயப்பனின் வலக்கை சின் முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இந்த சின் முத்திரையை "அறிவயையாளம்" என்பர். இறைவனை உணர்த்துவது பெரு விரல், ஆவியை உணர்த்துவது சுட்டு விரல், வினையை உணர்த்துவது நடுவிரல், மாயை உணர்த்துவது அணி விரல், (மோதிரம் அணியப் படுவதால் இப்பெயர்) மலத் தனை உணர்த்துவது சிறு விரல், பெருவிரலும், சுட்டு விரலும் சேருவது ஜீவாத்மா, பரமாத்மா ஐக்கியத்தை உணர்த்துகிறது.

மற்றொரு கை காட்டும் தத்துவம். "ஓம்காரமாகிய அகார, உகார, மகார வடிவினன் நான். என்னைச் சரணடைந்தவர்களை முமுக்ஷு நிலையில் சச்சிதானந்த ஸ்வரூபத்தில், தூங்காமல் தூங்கி சுகம்பெறும் ஆத்மபோத நிரந்தர நிலையை அளிக்க இத்தவத்திருக் கோலத்தில் இருக்கிறேன். அந்த நிலை அடைய என் பாதார விந்தத்தை நாடுங்கள்", என்று தன் இடக்கையால் தன் திருப்பாதங்களை ஐயப்பன் சுட்டிக் காட்டுகிறார். ஐயப்பன் கால்களை இணைக்கும் பட்டை சிவ, விஷ்ணு ஐக்கியத்தைக் காட்டுவதாகும். அர்த்தநாரீ மூர்த்தத்தில் அம்பிகைக்கு அளித்து, உடலில் பாதி பாகத்தை கேசவார்த்த மூர்த்தத்தில் விஷ்ணு பெற்றிருக்கிறார்.

சாஸ்தாவின் ஆயுதம் 'செண்டு' என்று சில இடங்களில் கூறப்படுகிறது. இவர் கொடுத்த செண்டை கரிகால சோழன் இமயம் மீது வீசியதாகக் கூறப் படுகிறது. சாஸ்தா புத்தரே என்பது பௌத்தர்களின் கருத்து. பௌத்தர்கள் "புத்தம் சரணம் கச்சாமி" என்று கூறுவர். சாஸ்தா வழிபாட்டினர் "சாமியே சரணம் ஐயப்பா" என்கின்றனர்.

## காவல் தெய்வம்

**கச்சிவனைக் கச்சிக்காமக் கோட்டங்காவல்**
**மெச்சி இனித்திருக்கும் மெய்சாத்தான் கைச் செண்டு**
**கம்பக் களிற்று கரிகாற் பெருவளத்தான்**
**செம் பொன் கிரிதிரித்த செண்டு** – *பழம் பாடல்*

ஐயப்பன் கேரளாவில் கோவில் கொண்டிருந் தாலும், தென்னாட்டவர்களுக்கும் முக்கியமாக தமிழ் நாட்டினருக்கும், நன்கு அறிமுகமானவரே. தமிழ்நாட்டு கிராமங்களில் மாரியம்மன், காயி முதலியவர்களுடன் கிராம தேவதையாக இவர் பூஜிக்கப்படுகிறார். மண்ணா லான பெரிய யானை குதிரை உருவங்கள் இவர் ஆலயத்தில் முன் இருப்பதைக் கொண்டே இது ஐயனார் கோவில் என்பதைத் தெரிந்துக் கொண்டு விடலாம்.

ஐயனாருடைய ஆலயம் கிராமத்திற்கு வெளியில் தென் மேற்கு மூலையில் இருக்க வேண்டும் என்று ஈசான சிவகுரு தேவ பத்ததியில் கூறுப்படுகிறது. ஐயப்பனுக்கு "புறம்பணயான்" என்ற பெயரும் உண்டு. ஊருக்குப் புறம்பே கோயில் கொண்டவன் என்பது இதற்குப் பொருள்.

ஐயனாருக்கு "சாஸ்தா" ஹரிஹரபுத்ரன், கையனார், சாதவாகனன், கோழிக் கொடியோன், சாத்தான், வெள்ளை யானை வாகனன், செண்டாயுதன், பூரணைக் கேள்வன், புஷ்கலை மணாளன், ஆரியன், யோகி என்றெல்லாம் பெயர்களுண்டு. பிங்கல நிகண்டு சாஸ்தாவின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது.

ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் மூல மந்திரத்தில் இப்பெயர்களில் பல இடம் பெறுகின்றன. இவர் கிராமத்தைப் பரிபாலனம் செய்தலின் சாஸ்தா எனப் பெயர் பெற்றார். சாஸ்தா என்றால் பரிபாலனம் செய்பவர் என்ற அர்த்தம். பாலனம் செய்பவரை ஐயன் என்று சொல்வது வழக்கமாதலின் ஐயனார் என்ற பெயர் ஏற்பட்டது.

## பூதநாத கீதை : ஐயப்பன் செய்த உபதேசம்

பிரம்மசரியர், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு ஆசிரமங்களில் சிறந்ததும் இறைவனைச் சுலபமாக அடைவதற்கு ஏற்றதும் இல்லறத்திலிருந்து மற்றோரை ஆதரித்து இன்புறுவது மானிடர் பெறும் பாக்கியம் என்ற உண்மையை ஐயப்பன் தன்னை வளர்த்த பந்தள அரசனுக்கு உபதேசித்தார்.

அவர் மேலும் உபதேசித்ததாவது "கடவுளின் திருவடி அடையப் பல வழிகள் உண்டு. ஐம்புலன்களை அடக்கி, ஒருமுகமாக இறைவனைத் தியானித்து, அவரது திருவடியை அடையலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு வகைகளில் ஏதாவது ஒரு மார்க்கமாக முக்தி அடையலாம். மனத்தை

ஒருமனப் படுத்தி பரம்பொருளைச் சிந்தையில் கொண்டு தியானத்தில் இருத்தல் வேண்டும்.

பிரம்மத்திற்கு மாயையால் ரூபபேதம் உண்டாகிறது. ரூபம் மாறினாலும் பிரம்மத்தின் தன்மை மட்டும் ஒரு பொழுதும் மாறாது. பிரம்மம் – நித்யம், மாயை – அநித்யம், வைராக்கியத்தால் மாயையை அகற்றி, ஆணவ மலத்தை ஒழித்து பிரம்மத்தில் மனதை ஈடுபடுத்த வேண்டும். பகவானே பிரம்மம். அவனே பிரபஞ்ச ரூபமான பரப்பிரும்மம். யாவும் அவனுள் அடக்கம். மும்மூர்த்தி களின் முக்குணங்களாகிய சத்வம், ரஜஸ், தமஸ் என்பவை ஒவ்வொரு பிரபஞ்ச செய்கைகளுக்காக மும்மூர்த்தியாக பாவித்தன. பகவானுடைய பிரீதியை ஒன்பதுவித உபாயங்களில் அடையலாம். ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், வந்தனம், பாதசேவனம், அர்ச்சனம், தாஸ்யம், சக்யம், ஆத்ம நிவேதனம். ஆகவே பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாம். "பிரம்மத்தில் மனதைச் சேர்ப்பதற்கு ஆசார்யரின் உபதேசம் அவசியம். அவ்வாசாரியர், தெய்வபக்தி நற்குணம், பற்றற்ற மனப் பக்குவம், சிஷ்ய பந்தம் போன்ற குணங்களுடன் பாவக் கடலிலிருந்து கரையேறும் மரக்கலம்போல் ஆற்றல் உடையவனாக இருக்க வேண்டும். கடவுளை நிர்க்குணனாக பூஜித்தாலும், சர்க்குணனாக தியானித்தாலும் அவரவர் மனோபாவப் படி தோன்றி அருள் செய்வார்.

கலியுலகத்தில் பரமனை அடையப் பக்திமார்க்கம் ஒன்றே மிக எளிதானது. பற்றற்ற நிலையில் மனதை மட்டும் பகவானின் பாதங்களில் பற்று வைத்து வழிபடுவது உத்தம். ஏதேனும் ஆசையோடு ஈடுபடுதல் மத்தியம். கெட்ட சிந்தனையோடும் கேவலமான உலக விஷயங்களுக்காகவும் ஈடுபடுதல் அதமம். அதமபக்தர் களையும், பகவான் சிக்ஷித்து மேன்மையான பக்தியை ஊட்டி, நல்வழியில் திருப்பி மோட்ச மார்க்கத்தைக் காட்டுகிறது."

இதுவே "பூதநாத கீதை" என்ற பூதநாதனின் கீதோபதேசமாகும்.

## ஆறு ஆதாரத் தலங்கள்

சபரிமலை ஐயப்பா சரணம்
காந்தலை ஜோதியே சரணம்
குளத்துப்புழை பாலகனே சரணம்
ஆரியங்காவு அப்பனே சரணம்
அச்சன் கோவில் ஆசானே சரணம்

ஐயப்ப பக்தர்கள் சரணம் விளிக்கும்போது இந்தத் தலங்களைக் குறிப்பிடுகின்றார்கள். ஐயப்பன் நம்மைப் போலவே வாழ்ந்து நாம் நாமாகவே நித்யத்வம் அடைய குளத்துப் புழையில் பாலகனாகவும், சபரி மலையில் கௌமார கோலத்திலும், ஆரியங்காவில் தாம்பத்திய கோலத்தில் பூர்ணா பூஷ்பகலா சமேதனாகவும், அச்சன் கோவிலில் வானப்பிரஸ்த கோலத்தில் அரசனாகவும், காந்தமலையில் ஜோதியாகவும், வீற்றிருப்பதாக ஐதீகம். இந்தப்படி ஆராதிப்பதில் பெரும் தத்துவம் அடங்கி உள்ளது.

நமது தேகத்தில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. முதுகுத் தண்டுக்குள் கடைசியிலுள்ளது மூலாதாரம். பித்ருவி மயமான அதில் கணபதி வீற்றிருக்கிறார். நெல்லை மாவட்டத்தில் சொரிமுத்து அய்யனார் கோவில் மூலாதாரம்.

தொப்புளுக்கு கீழ்ப்பகுதியில் சுவாதிஷ்டானம். ஜல மயமான அப்பகுதியில் நாராயணன் இருக்கிறார். அச்சன் கோவில் – சுவாதிஷ்டானம், நாபி கமலத்திற்கு மணிபூரகம் என்று பெயர். அக்னி மயமான அப்பீடத்தில் இருப்பவர் சூரியன், ஆரியங்காவு – மணிபூரகம், வாயுமயமான ஹிருதய ஸ்தானம் அநாகதம். அங்கு பராசக்தி வீற்றிருக்கிறாள். குளத்துபுழா – அநாகதம்.

ஆகாச மயமான கண்டத்திற்கு விசுத்தி என்று பெயர். அங்கே நீலகண்டனான பரமசிவன் வீற்றிருக் கிறார். பந்தனம் – விசுத்தி.

ஆறாவது ஸ்தனாம் பஞ்சபூதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஸதானம். நெற்றியில் இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள அந்த ஸ்தானத்தில் ஐயப்பன் வீற்றிருக்கிறார் – ஆக்ஞை.

ஏற்கனவே கூறப்பட்டத் தலங்களைத் தவிர கேரளத்தில் திருவெள்ளக்காவு கம்மர வட்டம், அரட்டுப்புழா, நெட்டிச்சேரி ஆகிய இடங்களிலும் ஐயப்பனுக்கான ஆலயங்கள் உள்ளன. இது தவிர கேரளாவிலுள்ள சிவன் விஷ்ணு ஆலயங்களில் ஐயப்பனுக்குத் தனி சந்நிதி உண்டு.

# பதினெட்டுப்படி தத்துவம்

## படிப் பாட்டு

| | |
|---|---|
| ஒன்றாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| ஓச்சிறை பரதெய்வம் | சரணம் பொன்னய்யப்பா |
| இரண்டாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| ஸ்வாமி யல்லாதொரு | சரணம் பொன்னய்யப்பா |
| மூன்றாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| மூம்மூர்த்திகளே | சரணம் பொன்னயப்பா |
| நான்காம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| நாராயண ஸ்வாமி | சரணம் பொன்னய்யப்பா |
| ஐந்தாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| ஐந்துமலை தேவா | சரணம் பொன்னய்யப்பா |
| ஆறாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| ஆறாம்முளை ஆண்டவா | சரணம் பொன்னய்யப்பா |
| ஏழாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| எருமேலி வாசா | சரணம் பொன்னய்யப்பா |
| எட்டாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| சபரிகிரி வாசா | சரணம் பொன்னய்யப்பா |
| ஒன்பதாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| அச்சங்கோவில் ஈசா | சரணம் பொன்னய்யப்பா |
| பத்தாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| காந்தலை வாசா | சரணம் பொன்னய்யப்பா |
| பதினொன்றாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| குளத்தூர் ஐயனே | சரணம் பொன்னய்யப்பா |
| பன்னிரெண்டாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| ஆரியங்காவையனே | சரணம் பொன்னய்யப்பா |
| பதிமூன்றாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| பூலோகநாதா | சரணம் பொன்னய்யப்பா |
| பதிநான்காம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| பூமிப் பிரபஞ்சா | சரணம் பொன்னய்யப்பா |
| பதினைந்தாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| பரமதயாளா | சரணம் பொன்னய்யப்பா |
| பதினாறாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| பரப்பிரம்ம மூர்த்தி | சரணம் பொன்னய்யப்பா |
| பதினேழாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| பூமிக்குடை நாதா | சரணம் பொன்னய்யப்பா |
| பதினெட்டாம் திருபடி | : சரணம் பொன்னய்யப்பா |
| சபரிகிரி வாசா | சரணம் பொன்னய்யப்பா |

நற்படி பதினெட்டும் சரணம் பொன்னய்யப்பா

இந்த பதினெட்டுப்படிகள் மிக விசேஷம் வாய்ந்தவை. இந்த பதினெட்டுப்படிகள், பதினெட்டு புராணங்களை குறிக்கிற தென்றும், மற்றும் சிலர் பகவத் கீதையின் பதினெட்டு அத்தியா யங்களை குறிக்கிறதென்றும் கூறுவார்கள். இந்திரியங்கள், குணங்கள் ஆகிய பதினெட்டைக் குறிக்கிறதென் கிறார்கள்.

ஏகாக்ஷரத்தையும், அஷ்டாக்ஷரத்தையும் ஒன்றின் பக்கத்தில் ஒன்று எழுதினால் 18 வருடம் ஏகாக்ஷரம் என்பது “ஹ்ரீம்” என்கிற புவனேஸ்வரி மந்திரம். அஷ்டா க்ஷரம் விஷ்ணுவினுடையது. ஹ்ரீம் என்று அம்பாளை குறிப்பிடும்போது சிவனுடன் சாமரஸ்ய மான அம்பிகையைத் தான் குறிக்கும். ஆகவே சிவசக்தியுடன் கலந்த விஷ்ணு சக்தியையே இது குறிக்கும். மற்றொரு விசேஷம் 18,27,36 இம்மாதிரி எண்களை எல்லாம் ஒன்றுடன் ஒன்று கூட்டினால் ஒன்பது வரும். ஒன்பது என்பது சகுண ஸ்வரூபம். இது சக்தி அம்சம், பூஜ்யம் என்பதும் நிர்குண ஸ்வரூபம். ஆகவே சக்தி அம்சமான 18 படிகளைக் கடந்து ஐயனை தரிசிக்க இப்படி அமைக்கப் பட்டுள்ளது.

ஐயப்பன் நம்மைக் காக்கும் காவல் தெய்வம், காவல் தெய்வங்கள் இருக்கும் இடங்களில் 18 படி அமைப்பது ஒரு வழக்கமாக இருந்திருக்கிறது. அழகர் கோவிலில் கருப்பண்ண ஸ்வாமி என்ற காவல் தெய்வம் முன்பு 18 படிகள் அமைந்துள்ளது இங்கு கவனிக்கத் தக்கது.

கடைசியில் சபரிமலை ஐயப்பன் கோவில் கொண்டுள்ள மலையின் அடிவாரம் வந்துவிட்டது. பதினெட்டு படிகளை ஏறினால் சுவாமியின் திருக்கோவில் அடைந்துவிடலாம்.

அருட்பெருஞ்ஜோதியை தரிசிக்க இந்த 18 படிகள் உண்டு என்பது யோக சாஸ்திர விளக்கம்.

# V. மூலமந்த்ரம்

## (1) ஹரி ஹர புத்ர ஜப விதானம்

**1. ஆசமனம்:**

**அச்யுதாய நம: / அனந்தாய நம: / கோவிந்தாய நம:**

அல்லது பின்வருமாறு தத்வாசமனம் செய்யலாம்.

**ஆத்மதத்வம் சோதயாமி ஸ்வாஹா :**

**வித்யாதத்வம் சோதயாமி ஸ்வாஹா:**

**சிவதத்வம் சோதயாமி ஸ்வாஹா :**

**ஸர்வதத்வம் சோதயாமி ஸ்வாஹா :**

**2. கணபதி த்யானம் : சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே**

**3. ப்ராணாயாமம்: ஓம் பூ: + பூர்ப்புவஸ்ஸுவரோம்.**

**4. ஸங்கல்பம்: மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸ்ரீ ஹரி ஹர புத்ர ப்ரஸாத ஸித்யர்த்தம் ஸ்ரீ ஸ்ரீ ஹரி ஹர புத்ர மஹா மந்த்ர ஜபம் கரிஷ்யே.**

**5. குரு வந்தனம் : குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணுர் குருர், தேவோ மஹேச்வர: குருஸ்ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:**

**6. ருஷ்யாதி ந்யாஸம் : அஸ்ய ஸ்ரீ ஸ்ரீ ஹரி ஹர புத்ர மஹாமந்த்ரஸ்ய, அர்த்தநாரீஸ்வரோ பகவான் ருஷி: (தலையில்) அனுஷ்டுப்சந்த: (வாயில்), ஸ்ரீ ஸ்ரீ ஹரி ஹர புத்ரோ தேவதா** (இருதயத்தில்)

**7. ஜப விநியோகம் : ஹ்ரீம் பீஜம்** (வலது தோளில்)**: ஸ்ரீ சக்தி:** (இடது தோளில்)**; க்லீம் கீலகம்** (நாபியில்)**; ஸ்ரீ ஹரி ஹர புத்ர ப்ரஸாத ஸித்தியர்த்தே ஜபே விநியோக :** (எல்லா அங்கங்களிலும்)

**8. கரந்யாஸம் : ஹ்ராம் அங்குஷ்டாப்யாம் நம: ஹ்ரீம் தர்ஜனீப்யாம் நம: ஹ்ரும் மத்யமாப்யாம் நம: ஹ்ரைம் அநாமிகாப்யாம் நம: ஹ்ரௌம் கனிஷ்டிகாப்யாம் நம: ஹ்ர: கரதல பரப்ருஷ்டாப்யாம் நம:**

**9. ஹ்ருதயாதி அங்கந்யாஸம் : ஹ்ராம் ஹ்ருதயாய நம: ஹ்ரீம் சிரஸே ஸ்வாஹா: ஹ்ரும் சிகாயை வஷட் ஹ்ரைம் கவசாய ஹும்: ஹ்ரௌம் நேத்ரத்ரயாய வௌஷட் ஹ்ர: அஸ்த்ராய பட்**

**10. திக்பந்தனம்: பூர்ப்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த**।। (வலது கை சொடக்கி தலையை கையால் ப்ரதக்ஷிணமாக சுற்றவும்)

**11. தேவதை த்யானம்:**

ஆஸ்யாம கோமள விசால தனும் விசித்ரம் ।
வரஸோ வஸான மருணோத் பலதான ஹஸ்த: ।।

முத்தும் கரத்ன மகுடம் குடிலாஸ்தர கேசம் ।
சாஸ்தாரம் இஷ்ட வரதம் சரணம் பரப்த்யே: ।।

**12. லமித்யாதி பஞ்ச பூஜை :** (கரந்யாஸம் போல்)

லம் – ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்யாமி

ஹம் – ஆகாசாத்மனே புஷ்பை பூஜயாமி

யம் – வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி

ரம் – அக்ன்யாத்மனே தீபம் தர்சயாமி

வம் – அம்ருதாத்மனே அம்ருதம் மஹாநைவேத்யம் நிவேதயாமி

ஸம் – ஸர்வாத்மனே ஸர்வோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி

**13. மூல மந்த்ர ஜபம் :** (குரு உபதேசத்தின்படி)

*ஹம் ஹ்ரிம் ஹரிஹர பத்ராய புத்ரலாபாய சத்ரு நாசனாய*
*மத கஜ வாஹாணாய சோப ஹஸ்தாய மஹாசாஸ்த்ரே*
*ப்ரத்யக்ஷ வேலாயுதாய வர வரத ஸர்வ ஜனம் மே வசமான ஸ்வாஹா:*

**14.ப்ராணாயாமம்: ஓம் பூ: + பூர்ப்புவஸ்ஸுவரோம்.**

**15. ஹ்ருதயாதி அங்கந்யாஸம் : ஹ்ராம் ஹ்ருதயாய நம: ஹ்ரீம் சிரஸே ஸ்வாஹா: ஹ்ரும் சிகாயை வஷட் ஹ்ரைம் கவசாய ஹும்: ஹ்ரௌம் நேத்ரத்ரயாய வௌஷட் ஹ்ர: அஸ்த்ராய பட்**

**16. திக்விமோகம்: பூர்ப்புவஸ்ஸுவரோம் இதி திக்விமோக ।।**

**17. தேவதை த்யானம்:**

ஆஸ்யாம கோமள விசால தனும் விசித்ரம் ।
வரஸோ வஸான மருணோத் பலதான ஹஸ்த: ।।

முத்தும் கரத்ன மகுடம் குடிலாஸ்தர கேசம் ।
சாஸ்தாரம் இஷ்ட வரதம் சரணம் பரப்த்யே: ।।

**18. லமித்யாதி பஞ்ச பூஜை :** (கரந்யாஸம் போல்)

லம் – ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்யாமி

ஹம் – ஆகாசாத்மனே புஷ்பை பூஜயாமி

யம் – வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி

ரம் – அக்ன்யாத்மனே தீபம் தர்சயாமி

வம் – அம்ருதாத்மனே அம்ருதம் மஹாநைவேத்யம் நிவேதயாமி

ஸம் – ஸர்வாத்மனே ஸர்வோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி

**19. ஸமர்ப்பணம்: குஹ்யாதி குஹ்ய கோப்தா (கோப்த்ரீ) த்வம் க்ருஹாணாஸ்மத் க்ருதம் ஜபம் ஸித்திர்ப்பவது மே தேவ (தேவி) த்வத் ப்ரஸாதான் மயி ஸ்திரா:**

# VIII. நாமாவளி

## 1. ஐயப்பன் அஷ்டோத்ர சத நாமாவளி

ஓம் அம்ருதார்த்தம் க்ஷிரோததி மந்தன மஹாவிஷ்ணு ஸுதாய நம:
ஓம் அம்ருதபரிவேஷணாய ஸம்பூத மோஹினி தர்சித பரமேஸ்வரானுக்கிரஹ ஸுதாய நம:
ஓம் ஹரியராத்மஜாய நம:
ஓம் தேவ கார்ய துரந்தராய நம:
ஓம் பம்பாதீரே சிசுரூப அவதார க்ருதாய நம:
ஓம் மாயா மானுஷ விக்ரஹாய நம:
ஓம் மணி மாலா ஜ்வல கண்டஸதலா நம:
ஓம் பந்தள ராஜ வம்ச பாவனாய நம:
ஓம் பந்தள ராஜ ஆஹ்லதனாய நம:
ஓம் ஜன்ம ப்ரவிருதி தரமாலா காரண நாம தேயாய நம:
ஓம் மணிகண்டாய நம:
ஓம் பால லீலா தர்சநோத்த ஹர்ஷ பூரித ஜனகாய நம:
ஓம் ஸகல வேத சாஸ்த்ர அப்யஸ்திதாய நம:
ஓம் அச்வாரோஹன அஸ்திர சஸ்த்ர பண்டிதாய நம:
ஓம் ஸம்பூர்ண வித்யாய நம:
ஓம் ஸுத்ர சோபித சுந்தராய நம:
ஓம் பரம கல்யாண குண ஸம்பன்னாய நம:
ஓம் பால ரூபாய நம:
ஓம் மாத்ருப்ரியாய நம:
ஓம் துன்மந்திரிக்ருத க்ஷுத்ர சூர்ண ப்ரயோக நிவாரகாய நம: 20
ஓம் ஆபிசார ப்ரயோகத் பீடித ஜ்வரேன மலின தேஹாய நம:
ஓம் யோகி வேஷ சிவ ப்ரஸாதேன நிவர்த்த பீடாய நம:
ஓம் புனர் பாஸித வஜ்ர தேஹாய நம:
ஓம் துர் போதனே சிரரோஹ வேஷாங்கித மாத்ரு ப்ரியாய நம:
ஓம் வ்யாக்ர க்ஷீரார்த்தம் வனாகமனாய நம:
ஓம் பித்ரு தத்த நாரிகலே மஸ்தகாய நம:
ஓம் தேவ ரிஷி நாரத பூஜித பதாம்புஜாய நம:
ஓம் கோரமஹிஷி வத ப்ராத்தித புரந்தர பூஜிதா நம:
ஓம் அனுக்கிரஹ காரணாய நம:
ஓம் ப்ரம்மசாரிணே நம:
ஓம் பிரதிதாவன மஹிஷி வத பண்டிதாய நம:
ஓம் மஹிஷி பூத சரீர உத்க்ஷே பக்ருதாய நம:
ஓம் ஜய சீலாய நம:
ஓம் தேவ ஸமஸ்துதாய நம:
ஓம் ப்ரபாவ சாலினே நம:
ஓம் பராக்ரம சாலினே நம:
ஓம் பம்பா தீர விஹாராய நம:
ஓம் மஹா காள வீரஸமூக பரிவ்ருதாய நம:
ஓம் ஆக்ருயா வ்யாக்ராஸம்பூத தேவ கண ஸமாவ்ருதாய நம:
ஓம் பந்தள ராஜ்ய கமனாய நம: 40
ஓம் பீத ஜன அபய ப்ரதாய நம:
ஓம் ஸிம்ம வாஹனாரூடாய நம:
ஓம் ஸர்வ ஜன ஸேவ்யமானாய நம:
ஓம் ஸந்தோஷ ஜனக ஸந்தர்சிதாய நம:

| | | |
|---|---|---|
| ஓம் அபசாரக்ஷமாபனார்த்தம்ப்ரார்த்தித மாரு பூஜ்யாய | நம: | |
| ஓம் க்ஷமா காராய | நம: | |
| ஓம் க்ஷேம தாயினே | நம: | |
| ஓம் பட்டாபிஷேக இச்சித பித்ரு உபதேச காய | நம: | |
| ஓம் பரிஹ்ருதராஜ்யாபிஷேகாய | நம: | |
| ஓம் வைராக்ய சாலினே | நம: | |
| ஓம் ஊர்த்வ ரேதனே | நம: | |
| ஓம் கோராடவி புனராகமனாய | நம: | |
| ஓம் தபோ நிதயே | நம: | |
| ஓம் தத்வ மயாய | நம: | |
| ஓம் பித்ரு ப்ரார்த்தித சபரிகிரி நிவாஸாய | நம: | |
| ஓம் ஆஜ்யாபிஷேக ப்ரியாய | நம: | |
| ஓம் தத்யோதன ப்ரியாய | நம: | |
| ஓம் தர்ம சாஸ்த்ரே | நம: | |
| ஓம் தர்ம ஸ்வரூபாய | நம: | |
| ஓம் மகர ஜோதி ஸ்வரூபாய | நம: | 60 |
| ஓம் அகண்டானந்தாய | நம: | |
| ஓம் ஜோதிகற்பூர கோலாகலாய | நம: | |
| ஓம் பக்த ஹ்ருத் தாப நிவாரணாய | நம: | |
| ஓம் ப்ரம்ம விதே | நம: | |
| ஓம் ப்ரம்மண்யாய | நம: | |
| ஓம் ப்ராம்மணப்ரியாய | நம: | |
| ஓம் ப்ராணாயாம பராயணாய | நம: | |
| ஓம் யோகினே | நம: | |
| ஓம் யோக பாரகாய | நம: | |
| ஓம் பாதாப்ஜ ஸ்மரண ஜனானுகூலாய | நம: | |
| ஓம் லோக சோக வினாசனாய | நம: | |
| ஓம் ப்ரஸாதாபி முக்யாய | நம: | |
| ஓம் த்யான தத்பராய | நம: | |
| ஓம் ஸத்ய ஸங்கல்பாய | நம: | |
| ஓம் ஸகல லோக வசம்கராய | நம: | |
| ஓம் ஸர்வலோக பரிபாலகாய | நம: | |
| ஓம் பரசுராம ப்ரார்த்தித மூர்த்தயே | நம: | |
| ஓம் க்ஷேத்ர பாலகாய | நம: | |
| ஓம் சிந்தாமணயே | நம: | 80 |
| ஓம் தீன பந்தவே | நம: | |
| ஓம் அனாத ரக்ஷகாய | நம: | |
| ஓம் ஆபத் நிவாரணாய | நம: | |
| ஓம் கருணா மூர்த்தயே | நம: | |
| ஓம் விசால நேத்ராய | நம: | |
| ஓம் வ்ருதானுஷ்டித பக்தானுக்ரஹ காரணாய | நம: | |
| ஓம் அஷ்டாதச லோபானபதயே | நம: | |
| ஓம் நீதிமதே | நம: | |
| ஓம் நியமாய | நம: | |
| ஓம் ஸர்வாயுத தராமூர்த்தயே | நம: | |
| ஓம் தனுர் தராய | நம: | |
| ஓம் ஸர்வ கார்ய அனுகூல க்ருதாய | நம: | |

ஓம்ஸர்வ ஸம்பத் ப்ரதாயகாய நம:
ஓம்ஸர்வ துஷ்ட பயங்கராய நம:
ஓம்சீக்ர காரிணே நம:
ஓம்சிவ புத்ராய நம:
ஓம்சுத்த ஸத்வ ஸம்பூர்ணாய நம:
ஓம்லாம்போதர, சிகிவாஹன ஸஹ க்ரீடாய நம:
ஓம்லகு ஸித்திதாய நம:
ஓம்இஷ்ட ஸித்தி ப்ரதாயகாய நம: 100
ஓம்ஹேம பூஷணாய நம:
ஓம்க்ஷிப்ர ப்ரஸாதாய நம:
ஓம்மன்மத விக்ரஹாய நம:
ஓம்பானக ப்ரியாய நம:
ஓம்அத்வைத ஸித்தாந்தாய நம:
ஓம்சரண ப்ரியாய நம:
ஓம்ஜாதி வர்ண பேத தீதாய நம:
ஓம்நமஸ்கார ப்ரியாய நம:
ஓம்ஸ்ரீ ஹரிஹராத்மஜாய நம:

புண்டரீகம் பூர்ண புஷ்களா ஸமேத ஹரிஹர புத்ரன் ஐயனையப்ப ஸ்வாமியே சரணம் ஐயப்பா

## ௨. ஸ்ரீ தர்ம சாஸ்தா அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் மஹாசாஸ்த்ரே நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் மஹாதேவ ஸுதாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் லோக கர்த்ரே நம:
ஓம் லோக ஸ்த்ரே நம:
ஓம் லோக ஹர்த்ரே நம:
ஓம் பராத் பராய நம:
ஓம் த்ரிலோக ரக்ஷகாய நம:
ஓம் தன்வினே நம:
ஓம் தபஸ்வினே நம:
ஓம் பூதஸைநிகாய நம:
ஓம் மந்த்ரவேதினே நம:
ஓம் மஹா வேதினே நம:
ஓம் மாருதாய நம:
ஓம் ஜகதீச்வராய நம:
ஓம் லோகாத்யக்ஷாய நம:
ஓம் அக்ரண்யே நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் அப்ரமேய பராக்ரமாய நம:
ஓம் ஸிம்ஹா ரூடாய நம:
ஓம் கஜா ரூடாய நம:
ஓம் ஹயா ரூடாய நம:
ஓம் மஹேச்வராய நம:
ஓம் நானாசஸ்த்ர தராய நம:
ஓம் அநர்க்காய நம:
ஓம் நானாவித்யா விசாரதாய நம:
ஓம் நானா ரூபதராய நம:
ஓம் வீராய நம:
ஓம் நானாட்ராணி நிஷேவகாய நம:
ஓம் பூதேசாய நம:
ஓம் நாக கேசாய நம:
ஓம் பூதிதாய நம:
ஓம் ப்ருத்யாய நம:
ஓம் புஜங்கா பரணோத்தமாய நம:
ஓம் இக்ஷுதன்வினே நம:
ஓம் புஷ்ப பாணாய நம:
ஓம் மஹா ரூபாய நம:
ஓம் மஹா ப்ரபவே நம:
ஓம் மாயாதேவீ ஸுதாய நம:
ஓம் மான்யாய நம:
ஓம் மஹா நீதாய நம:
ஓம் மஹா குணாய நம:
ஓம் மஹா சைவாய நம:
ஓம் மஹா ருத்ராய நம:
ஓம் வைஷ்ணவாய நம:
ஓம் விஷ்ணு பூஜகாய நம:
ஓம் விக்னேசாய நம:
ஓம் வீரபத்ரேசாய நம:
ஓம் பைரவாய நம:
ஓம் ஷண்முக த்ருவாய நம:
ஓம் மேரு சருங்க மாஸீனாய நம:
ஓம் முனிஸங்க நிஷேவிதாய நம:
ஓம் தேவாய நம:
ஓம் பத்ராய நம:
ஓம் ஜகந்நாதாய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் கணேச்வராய நம:
ஓம் மஹா யோகினே நம:
ஓம் மஹா மாயினே நம:

ஓம் மஹா க்ஞானினே நம:
ஓம் மஹா ஸ்திராய நம:
ஓம் தேவ சாஸ்த்ரே நம:
ஓம் பூத சாஸ்த்ரே நம:
ஓம் பீமஹாஸ பராக்ரமாய நம:
ஓம் நாக ஹாராய நம:
ஓம் வ்யோம கேசாய நம:
ஓம் ஸநாதனாய நம:
ஓம் ஸுகுணாய நம:
ஓம் நிர்குணாய நம:
ஓம் நித்யாய நம:
ஓம் நித்யத்ருப்தாய நம
ஓம் நிராச்ரயாய நம:
ஓம் லோகாச்ரயாய நம:
ஓம் கணாதீசாய நம:
ஓம் சது: ஷஷ்டிகலா மயாய நம:
ஓம் ரிக்யஜுர்ஸ்ஸாம அதர்வணரூபிணே நம:
ஓம் மல்லகாஸுர பஞ்சனாய நம:
ஓம் த்ரி மூர்த்தயே நம:
ஓம் தைத்ய மதனாய நம:
ஓம் ப்ரக்ருதயே நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் கால க்ஞானினே நம:
ஓம் மஹாக்ஞானினே நம:
ஓம் காமதாய நம:
ஓம் கமலேஷணாய நம:
ஓம் கல்ப வ்ருக்ஷாய நம:

ஓம் மஹா வ்ருக்ஷாய நம:
ஓம் வித்யா வ்ருக்ஷாய நம:
ஓம் விபூதி தாய நம:
ஓம் ஸம்ஸார தாப விச்சேத்ரே நம:
ஓம் பசுலோக பயங்கராய நம:
ஓம் ரோகஹந்த்ரே நம:
ஓம் ப்ராணதாத்ரே நம:
ஓம் பரகர்வ விபஞ்சனாய நம:
ஓம் ஸர்வசாஸ்த்ரார்த்த தத்வக்ஞாய நம:
ஓம் நீதி மதே நம:
ஓம் பாப பஞ்சனாய நம:
ஓம் புஷ்கலா பூர்ண ஸம்யுக்தாய நம:
ஓம் பரமாத்மனே நம:
ஓம் ஸதாங்கதயே நம:
ஓம் அநந்தாதித்ய ஸங்காசாய நம:
ஓம் ஸுப்ரஹ்மண்யாநுஜாய நம:
ஓம் பலினே நம:
ஓம் பக்தாநுகம்பினே நம:
ஓம் தேவேசாய நம:
ஓம் பகவதே நம:
ஓம் பக்த வத்ஸலாய நம:

*ஸ்ரீ பூர்ணா புஷ்கலாம்பா ஸமேத*
*ஸ்ரீ ஹரிஹர புத்ர ஸ்வாமினே நம:*
*அஷ்டோத்தர சதநாமாவளி:*

*நாநாவித பரிமள பத்ரபுஷ்பாஞ்சலிம் ஸமர்ப்பயாமி*

## ௩. ஸ்வாமியே சரணம் ஐயப்பா

ஒவ்வொரு நாமாவின் முடிவில் ‘‘சரணம் ஐயப்பா’’ என்று சொல்லவும்

சுவாமியே சரணம் ஐயப்பா
கன்னி மூலை கணபதியே
ஈஸ்வரன் செல்வனே
குருவாயூரப்பன் மைந்தனே
ஹரிஹர சுதனே
ஓம் மகாசிவ சக்தி மகனே
ஓம் மகா சக்தி மகனே
ஓம் பராசக்தி மகனே
உமை மகிழ் செல்வனே
மோகினி பாலகனே 10
யானைமுகன் தம்பியே
சக்திவடிவேலன் தம்பியே
ஆறுமுகன் தம்பியே
வாபரா சுவாமியே
மாளிகைபுரத்து தேவனே
கருப்பண்ண சுவாமியே
கடுத்த சுவாமியே
கருத்த சுவாமியே
அச்சங்கோவில் அரசே
எரிமேலி தர்மசாஸ்தாவே 20
அன்னதானப் பிரபுவே
அச்சம் தவிர்ப்போனே
ஆர்யங்காவு தர்மசாஸ்தாவே
ஆனந்த மூர்த்தியே
ஈகை பிரியனே
ஈடிலா தெய்வமே
உடுக்கை பிரியனே
உடும்பாரை தெய்வமே
உற்றதுணை வருவோனே
ஊமைக்கருள் புரிந்தோனே 30
ஊனிடர் தவிர்ப்போனே
ஊழ்வினை அகற்றுவோனே
ஊக்கம் அளிப்போனே
எரிமேலி தர்மசாஸ்தாவே
எங்களைக் காப்பவனே
எங்கள் இடர் தீர்ப்போனே
ஏகாந்த மூர்த்தியே
ஏழைக்கிரங்கும் ஈசனே
ஏற்றம் அளிப்பவனே
ஐந்து மலை வாசனே 40
ஐயங்கள் தீர்ப்போனே
ஐயப்ப தெய்வமே
ஐராவதப் பிரியனே
ஒப்பில்லா மணியே

ஒப்பற்ற தெய்வமே
ஓர் மண்டல பிரியனே
ஒளியான தெய்வமே
ஓதாதுணர்ந்தவனே
ஔஷத மூர்த்தியே
ஔபாசனப் பிரியனே 50
ஔதாரியத்தின் ஆழியே
ஔங்கார மூர்த்தியே
அம்பலத்தரசனே
அம்பிகை பாலனே
அம்புஜ கண்ணனே
அகந்தையை அழிப்போனே
அஞ்ஞானம் தீர்ப்போனே
அஷ்டசித்தி பாலகனே
அனிபெறும் படைப்பே
அகமாயை களைவோனே 60
ஆதரிக்கும் தெய்வமே
ஆத்ம சொரூபணே
ஆசையை அகற்றுவோனே
புலிவாகனனே
இகபர புகழ் தேவனே
இதயம் கவர்ந்தோனே
கண்டெடுத்த மணிகண்டா
கண்கண்ட தெய்வமே
வில்லாளி வீரனே
வீரமணிகண்டனே 70
கலிசால மூர்த்தியே
கலியுக வரதனே
கதிதரும் மணியே
குலம்காக்கும் தெய்வமே
குருவின் குறை தீர்த்தவனே
குருவுக்கும் குருவே
குறை தீர்ப்போனே
கண்கொடுத்த தெய்வமே
நாகராஜர் துதிப்போனே
நல்ல உள்ளம் அளிப்போனே 80
நடு நாயக பிரியனே
நலம்பல தருவோனே
நாத சங்கீத பிரியனே
அழுதா நதி வாசனே
கல்விடும் குன்று மூர்த்தியே
கரிமலை தெய்வமே
உத்தம சீலனே
அலங்காரப் பிரியனே
சஞ்சலம் தீர்ப்போனே
சத்ரு சம்ஹார மூர்த்தியே 90
நீலிமலை வாசனே
சபரிக்கருள் புரிந்தோனே
சபரிமலை மூர்த்தியே
சங்கடம் தீர்ப்போனே
சத்ய சொரூபனே
பதினெட்டாம்படிக் கதிபதியே
பலதானப் பிரபுவே
இஷ்டவாசம் தருவோனே
கற்பூரப்பிரியனே
சரணகோஷப் பிரியனே 100
காந்தலை ஜோதியே
இருமுடிப் பிரியனே
நெய்யபிஷேகப் பிரியனே
ஆனந்த ஜோதியே
சரங்குத்தி ஆலே
பூர்ண புஷ்களா காந்தனே
எங்கும் நிறைந்தவனே
ஸ்வாமியே சரணம் 108

தெரிந்தும் தெரியாமலும் அறிந்தும் அறியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்தருளும் என் பொன்னம்பல வாஸன் சத்தியமான பொன் பதினெட்டாம்படி மேல் வாழும் ஓம் ஹரிஹர சுதன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.